இந்தியா முழுவதும் 62 லட்சம் பேருக்கு பயிற்சி அளிக்கப்படும் நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் 42 லட்சம் பேருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி!

அப்துல் கலாம் கண்ட கனவை நனவாக்கி வருபவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் இளைஞர்கள் கருத்தரங்கம் நிகழ்ச்சியில் விஞ்ஞானி டாக்டர் பொன்ராஜ் வெள்ளைச்சாமி பேச்சு!

சென்னை,அக்.18-

நான் முதல்வன் திட்டத்தில் தமிழ் நாட்டில் மட்டும் 42 லட்சம் பேருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இந்தியா முழு மைக்கும் 62 லட்சம் பேருக்கு மட்டுமே திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப் பட்டிருக்கிறது என்றும், டாக்டர் அப் துல் கலாம் கனவை நனவாக்கி வருபவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என் றும், தமிழ்நாடு முதலமைச்சரின் அடுக் கடுக்கான சாதனை திட்டங்களை எடுத் துக் கூறி அப்துல் கலாம் அவர்களின் முன்னாள் ஆலோசகர் டாக்டர் பொன் ராஜ் வெள்ளைச்சாமி பேசினார்.

மேனாள் குடியரசுத் தலைவர் ஏ.பி. ஜே அப்துல்கலாம் அவர்களின் 94 ஆம் ஆண்டு பிறந்தநாள் மற்றும் உலக மாண வர்கள் தினத்தை முன்னிட்டு

(15-10-2025) அன்று சைதாப் பேட்டை அன்னை வேளாங்கண்ணி கலைக் கல்லூரி வளாகத்தில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் மாபெரும் இளைஞர்கள் கருத்தரங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த கருத்தரங்க நிகழ்ச்சியில் 'இளை ஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியா? ஆச்சரியக்குறியா!' எனும் தலைப்பில் மேனனாள் குடியரசு தலைவர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களின் மேனாள் ஆலோசகர் மற்றும் இந்திய ஜனநாயக மீட்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பா ளர் டாக்டர் பொன்ராஜ் வெள்ளைச் சாமி இளைஞர்களுக்கு சிறப்பான ஒரு வழிகாட்டுதல் உரை ஆற்றினார். அவர் குறிப்பிட்டதாவது:

இந்த இளைஞர்களின் கருத்தரங்கத் திற்கு தலைப்பு 'இளைஞர்களின் எதிர் காலம் கேள்விக்குறியா? ஆச்சரியக்கு றியா !' என்பதுதான். கேள்விக்குறி என்று சொன்னால் வளைந்து இருக்கி றது? ஆச்சரியக்குறி என்று சொன்னால் நிமிர்ந்து இருக்கிறது. இளைஞர்கள் முதுகை வலைய செய்வது எது? அவர் களை நிமிரச் செய்வது எது? அவர்களது சிந்தனையை மழுங்கடிப்பது எது? அவர் களது சிந்தனையை கூர்மைப்படுத்துவது எது? அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்துவது எது? சிதறடிப்பது எது? இதுதான் அந்தக் கேள்வி. இந்த கேள்விக்கு வருவதற்கு முன்பாக 94 ஆம் ஆண்டு பிறந்த நாள் கொண்டாடக்கூ டிய அப்துல்கலாம் அவர்களின் ஒரு சம் பவத்தை நினைவு கூர்ந்து ஆரம்பிக்கி றேன். 2014 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் தேதி அவருக்கு 84 ஆம் ஆண்டு பிறந்த நாள். நான் அவரோடு 15 ஆண்டுகள் அவருடைய பிறந்த நாளை கொண்டாடி இருக்கிறேன். விமானத்தில் பிறந்தநாள் கொண்டாடி இருக்கிறோம். பல்வேறு கிராமங்களில் கொண்டாடி இருக்கிறோம். 84 ஆவது பிறந்த நாளின் போது உங்களை எனக்கு வாழ்த்த வயதில்லை. எனக்கு ஆசி கொடுங்கள் என்று கேட்டேன். என்னை 84 வயது கிழவன் என்றா சொல்கிறாய் என்று கேட்டார். ஆமா சார் உங்களுக்கு 84 வயது ஆகிவிட்டதே என்று சொன் னேன் நான். No. நான் 84 வயது கிழவன் அல்ல. எனக்கு வயது 35 என்று சொன் னார்.

எனக்கு ஒரே ஆச்சரியம். என்ன சார் 35 வயது என்று சொல்கிறீர்களே? என்று கேட்டேன். அதற்கு அவர் அவுல் பக்கிரி ஜெய்னால் அப்துல்தீன் அவர்களுக்கு ஏழு மகன்கள். நான் ஏழாவது மகன். நான் சிறுவயதில் படிக்கும் பொழுது கலாம் கலாம் என்று கூப்பிடுவார்கள். அது எனக்கும் என் குடும்பத்திற்கும் தெரியும். ராமநாதபுரத்தில் ஆரம்பப் பள்ளியில் படித்தேன். திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில், எம்.ஐ.டி மெட்ரா ஸில் படித்தேன். ஒரு மாணவனாக படித்தேன்.

இரவு- பகல் பாராது பணியாற்றும் மா.சு.!

ஆனால் என்றைக்கு 1980 இல் இந்தி யாவிலேயே முதன்முறையாக சொந்த மாக தற்சார்பு கொண்ட சுயமாக தயா ரிக்கப்பட்ட ராக்கெட் எஸ்.எல்.வி -3 என்று விண்ணில் ஏவி ரோகினி செயற் கைக்கோளில் நிலை நிறுத்தினேனோ? அன்றைக்கு தான் அப்துல் கலாம் என்ப வரை இந்த உலகத்திற்கு தெரியும். இந் தியாவிற்கு தெரியும். எனவே அப்துல் கலாம் என்ற நான் உலகத்திற்கு தெரிந்த நாள் தான் 1980. ஆகவே எனக்கு வயது 35 என்று சொன்னார்.

அன்றைக்கு எனக்கு ஒன்று புரிந்தது. எல்லோரும் பிறக்கலாம். படிக்கலாம். வாழலாம். குடும்பத்திற்காக உழைக்க லாம். வேலைக்குச் செல்லலாம். ஆனால் என்றைக்கு அவர்கள் பொதுநலன் மக்க ளுக்காக அவர்களது உழைப்பு பயன்ப டுகிறதோ? அன்றைக்குத்தான் அவர்கள் பிறந்ததாக அர்த்தம்.

நமது மருத்துவ துறை அமைச்சர் இன்றைக்கும் 20 கிலோமீட்டர் ஓடி விட்டு வருகிறார் என்றால் அது அவரு டைய நம்பிக்கையும், தன்னம்பிக்கை யும் பறைசாற்றுகிறது. அவரது உணர்வை பறைசாற்றுகிறது. கரூருக்கு செல்வதற்கு முன்பாக காலையில் 20 கிலோமீட்டர் ஓடி இருக்கிறார். கரூரிலி ருந்து சென்னைக்கு வந்த பிறகு கரூர் சம்பவம் கேள்விப்பட்டு மீண்டும் கரூ ருக்கு சென்று இரவு பகல் பாராது பணி யாற்றி இருக்கிறார். கடுமையான அந்த சேவையை செய்து இருக்கிறார் என் பதை அவர் பேசும்போது குறிப்பிட்டார்.

ஆனால் செலவழித்து அதற்கு அவன் அடிமையாகும் போது தான் பிரச்சனை. சினிமாவிற்கு அடிமையாக, மீடியாவிற்கு அடிமையாக, நடிகர்க ளுக்கு அடிமையாக, போதைக்கு அடி மையாக, கெட்ட பழக்க வழக்கங்க ளுக்கு அடிமையாக, இளைஞர்கள் போகும்போது இந்த இளைஞர்களை நேராக நிமிர்த்தி, நிமிர்ந்த நன்நடை யோடு நேர்மை திறத்தோடு அவனை நடக்க வைப்பது யார்? இத்தனை பிரச் சனைகளுக்கு மத்தியில் அந்த இளை ஞன் இருக்கிறான். இந்த இளைஞனை எப்படி சரி செய்வது? இந்த இளைஞர் களின் எதிர்காலத்தை எப்படி கட்ட மைப்பது? இந்த இளைஞனுக்கு எப்ப டிப்பட்ட வாழ்க்கையை சீரமைத்து கொடுப்பது? இதற்கு யார் பொறுப்பு? முதல் பொறுப்பு பெற்றோர்களுக்கு. இரண்டாவது பொறுப்பு ஆசிரியர்க ளுக்கு. மூன்றாவது பொறுப்பு நண்பர் களுக்கு. ஆனால் அத்தனை பொறுப்பு களுக்கும் அடித்தளமாக இருப்பது அரசாங்கம். தமிழ்நாடு அரசிற்கு அந்த பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பை தமிழ்நாடு அரசு சரியாக செய்கிறதா? எந்த அரசு செய்கிறது? எந்த மாநிலம் அதை செய்கிறது? இந் தியா செய்கிறதா? தமிழ்நாடு செய்கி றதா? இல்லை மற்ற மாநிலங்களை ஆளக்கூடிய அரசாங்கம் செய்கிறதா? இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில்?

பொருளாதாரம் வளர்ச்சியடைய பாடுபட்டவர் அப்துல்கலாம்!

வளைந்து இருக்கக்கூடிய இளைஞ னுக்கு நேராக நிமிர்த்தி வெற்றி நடை போட வைக்கக்கூடிய அரசாக ஒரு அரசு இருக்கிறதா? என்று பார்க்கும் பொழுது நான் பல்வேறு மாநிலங்க ளுக்கு சென்றவன். பல்வேறு மாநிலங்க ளில் அப்துல் கலாம் அவர்கள் உரையாற் றுவதற்கு பணியாற்றியவன் என்கிற வகையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் என்ன செய்தால் இந்த மாநிலம் நல்ல வளர்ச்சியை அடையும் என்ற இலக்கு களை திட்டங்களை வகுத்துக் கொடுத் தவன் என்ற முறையில் என்றெல்லாம் ஆராய்ந்து பார்க்கும் போது அப்துல் கலாம் அவர்களோடு இணைந்து அவர் சொன்ன திட்டங்களை நினைக்கும்போது ஒரு சில விஷயங்கள் நினைவிற்கு வருகிறது. என்னவென் றால் ஒரு மாநிலம் பொருளாதாரத்தி லும், சமூகத்திலும், அரசியலிலும், மேம் பாடு அடைய வேண்டும். பொருளாதாரத்தில் இரட்டை இலக்கை வளர்ச்சி அடைய வேண்டும். தனிநபர் வருமானம் ஏழிலிருந்து, எட்டு லட்சம் ஆண்டிற்கு வர வேண்டும். பொருளாதார வளர்ச்சி வர வேண்டும்.

கல்வியிலும், மருத்துவத்திலும், சாதனை சரித்திரம் படைக்க வேண்டும். நகர்புறத்தில் உள்ள வசதிகளை கிராமப் புறத்திற்கு கொண்டு சென்று புரா என் கிற திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இப்படி பல்வேறு திட்டங்களை வகுத் துக் கொடுத்ததன் காரணமாக கடந்த ஆறு ஏழு ஆண்டுகளாக ஒவ்வொரு மாநிலத்தைப் பற்றி ஆராயும் போது எந்த மாநிலம் இதை செயல்படுத்தியது என்று பார்க்கும்போது கடந்த நான் கரை ஆண்டு காலத்தில் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்த சாத னைகள் அப்துல் கலாம் என்ன கனவு கண்டாரோ? அந்தக் கனவை நினை வாக்க கூடிய திசையில் இருக்கிறது. மு க ஸ்டாலின் அவர்களை பாராட்டக்கூ டிய வேண்டிய செயலை செய்ய வேண் டுமா? இல்லையா? வரவேற்க வேண் டுமா? இல்லையா? ஒரு தீமையை, ஒரு அநீதியை, ஒரு வன்முறையை, ஆதரிக்க பல கூட்டம் இருக்கும் போது, நல்லதை ஆதரிக்க தவறினால், அந்த நாடு வளர்ச்சி அடையாது.

சில பேர் சொல்வார்கள் அப்துல் கலாம் அவர்கள் இரண்டாவது முறை யாக கலைஞர் தடுத்துவிட்டார் என்று அவர்கள் எல்லாம் சொல்வார்கள். முதல்முறையாக வருவதற்கு கலைஞர் ஆதரித்தவர் தானே. முதல்முறையாக குடியரசு தலைவர் ஆவதற்கு கலைஞ

ரும் ஆதரித்தார். ஜெயலலிதாவும் ஆத ரித்தார். பிஜேபியும் ஆதரித்தது. காங்கி ரசும் ஆதரித்தது. அனைவரும் ஆதரித்தனர். அவர் முதன்முறையாக வரும் பொழுது அவர் சொன்ன கண்டி ஷன் என்னவென்றால் அனைவரும் ஆத ரித்தால் இதை நான் ஏற்றுக் கொள்கி றேன் என்று வாஜ்பாயிடம் சொன்னார்.

எனக்குத் தெரியும். ஆனால் அப்துல் கலாம் கனவை நினைவாக்க கூடிய ஒரு அரசை மு.க. ஸ்டாலின் அவர்கள் நடத் தும்போது அதை ஆதரிக்காமல் இருந் தால் அப்துல் கலாம் அவர்களுக்கு செய் யக்கூடிய துரோகமாக இருக்கும். எத்தனையோ பிரச்சனைகள் இருக்கி றது. பிரச்சனைகளை பார்த்து ஓடுபவன் தலைவன் அல்ல. பிரச்சனை வந்த பிறகு பின்னங்கால் வைத்து திருச்சி விமான நிலையத்துக்கு ஓடுபவன் தலைவன் அல்ல. பிரச்சனையின் களத்திற்கு சென்று அன்று இரவு 3 மணி வரை முகா மிட்டு அந்தப் பிரச்சினையை சரி செய் பவன் தான் தலைவன் என்று இன் றைக்கு நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. நண்பர்களே இப்படிப்பட்ட ஒரு சூழ லில் இளைஞர்களைப் பற்றி நாம் பேசும்போது இந்த இளைஞர்கள் இன் றைக்கு இத்தனை பிரச்சனைகளை சந் தித்துக் கொண்டிருக்கிறார்கள். பல் வேறு பிரச்சனைகள். ஏ ஐ தொழில்நுட்பத்தால் வேலையின்மை ஒரு பிரச்சனை. இத்தனை பிரச்சனைகளுக்கு நடுவில் இளைஞர்க ளின் எதிர்காலத்தை சிந்திக்க கூடிய ஒரு தலைவன் இருந்தால்தான் அந்தப் பிரச் சினைகளுக்கு வடிகாலாக, வாய்ப்பாக, ஏணியாக, செயல்பட முடியும். அந்தத் திட்டத்தை அப்துல் கலாம் அவர்கள் சொன்னார்கள் 150 மில்லியன் skilled grow Young force globally உருவாக்க வேண் டும் என்று அப்துல் கலாம் அவர்கள் இலக்கு நிர்ணயித்தார். அதாவது 15 கோடி பேர். இந்தியா முழுவதும் ஸ்கில்டு யூத் கொண்டு வர வேண்டும் என்று ஒரு இலக்கை நிர்ணயித்தார் அப் துல் கலாம் அவர்கள். இன்றைக்கு

நான் முதல்வன் திட்டத்தின் சிறப்பு!

இந்தியா முழுமைக்கும் சேர்ந்து 65 லட்சம் பேருக்கு Skilled கொடுத்து இருக்கு நேஷனல் ஸ்கில் டெவலப் மெண்ட் கார்ப்பரேஷன் - ஒன்றிய அரசு. ஆனால் தமிழகத்தில் மட்டும் 42 லட்சம் பேருக்கு ஸ்கில் டெவலப் மெண்ட் கொடுத்திருக்கிறது. தமிழ்நாடு அரசை பாராட்ட வேண்டுமா? கூடாதா? 2000 நிறுவனங்களை உரு வாக்கி ஒருங்கிணைத்து ஒரு லட்சம் ஆசி ரியர்களை உருவாக்கி, 42 லட்சம் பேருக்கு அடிஷனல் ஸ்கில்டு சான்றிதழ் கொடுத்து, இளைஞர்களை மதிப்பு கூட் டப்பட்ட வேலைக்கு தகுதியாக்கி அவர்களை உருவாக்கி இருக்கிறார் நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக தமிழ்நாடு முதல்வர் அவர்கள்.

தமிழக முதல்வரை பாராட்ட வேண் டுமா? வேண்டாமா? நான் கட்சி சார் பற்றவன். எந்த கட்சியின் சாராதவன். அப்படி இருக்கும்போது நல்லது செய்த செய்யக்கூடிய ஒரு முதல்வரை பாராட்ட வேண்டுமா? வேண்டாமா? அவருக்கு தோள் கொடுக்க வேண் டுமா? வேண்டாமா? நான் முதல்வன் திட்டம் இந்தியாவிலேயே எந்த மாநில மும் செய்யாத திட்டம். அப்துல் கலாம் கண்ட கனவை அப்படியே நினைவாக் கிக் கொண்டிருக்கிறார் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதனால்தான் நான் பாராட் டுகிறேன்.

வெற்றி நிச்சயம் என்ற ஒரு திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். படித்து முடித்து வேலையில்லாமல் இருப்பவர் கள். எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு,ஐ.டி., டிப் ளமோ படித்து வேலையில்லாமல் இருக் கக்கூடியவர்களுக்கு தொழில் முனை வோர் திட்டம் கொடுத்து 250 மணி நேரம் வேலை பார்த்தால் அவர்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை. 300 மணி நேரம் வேலை பார்த்தால் 12 ஆயி ரம் ஊக்கத்தொகை. இதில் 14 லட்சம் பேரை உருவாக்கி இருக்கிறார் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் அவரை பாராட்ட வேண்டுமா? வேண்டாமா? எந்த மாநிலமும் செய்யாத ஒரு திட் டத்தை செய்த ஒரு முதல்வரை பாராட்ட வேண்டுமா? கூடாதா?

புதுமைப்பெண் திட்டம், இந்தியா வில் எத்தனையோ மாநிலங்கள் ஸ்காலர் ஷிப் கொடுக்கிறது. ஆனால் தமிழகத் தில் மட்டும்தான் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் அந்த பெண்களுக்கு கொடுத்து, பெண்களை கல்லூரி படிப் பிற்கு வரவழைத்து அவர்களை வாழ்க் கையில் ஒரு மேம்பாடு அடைவதற்கு ஒரு உதவி திட்டத்தை முதல்வர் கொடுக்கிறார் என்று சொன்னால் அதை பாராட்ட வேண்டுமா? வேண்டாமா? ஒரு பக்கம் கல்வியில் சிறந்த தமிழ்நாடு. காலை உணவு திட்டம் உலகமே போற் றக்கூடிய வகையில் அந்தத் திட்டத்தை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத் திக் கொண்டிருக்கக்கூடிய தமிழக முதல்வரை பாராட்ட வேண்டுமா? கூடாதா? எதற்காக இதை செய்கிறார்?

இத்தனை பிரச்சினைகள் மாணவர் களுக்கு இளைஞர்களுக்கு இருக்கிறது என்று சொல்லி இவற்றையெல்லாம் சரி செய்வதற்கு எதை செய்தால் சரியாக இருக்கும் என்று சொல்லி திட்டமிட்டு காலை உணவு கொடுத்து அவர்களை பள்ளிக்கு வரவழைத்து அவர்களைப் படிக்க வைத்து, புதுமைப்பெண் திட் டம், தமிழ் புதல்வன் திட்டம் இந்தத் திட்டத்தின் வழியாக ஆயிரம் ரூபாய் கொடுத்து சொல்லாததை எல்லாம் செய்து இத்தனை வசதி எல்லாம் செய்து கல்வியில் மேம்பட்ட ஒரு சமுதாயத்தை உருவாக்கக்கூடிய முதல்வராக தமிழக முதல்வர் திகழ்கிறார்.

அதுமட்டுமல்ல. அப்துல் கலாம் கண்ட கனவு இந்தியாவை முழு வீச்சில் வெல்ல வைக்க வேண்டும். திறமை என் பது கிராமத்தில் கிடைக்கும். அதை இள மையிலேயே அடையாளம் காண வேண்டும் என்று அப்துல் கலாம் பல் வேறு இடங்களில் பேசி இருக்கிறார். அவர்களை கண்டறிந்து அவர்களு டைய விளையாட்டு மைதானம், அவர் களுக்கு தேவையான விளையாட்டுப் பொருட்கள், இவற்றையெல்லாம் கொடுக்க வேண்டும் என்று பல்வேறு இடங்களில் பேசியிருக்கிறார். கூட இருந்து அதையெல்லாம் எழுதினவனே நான்தான். அதை தமிழகம் ஒன்றுதான் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறது. 234 சட்டமன்ற தொகுதிகளிலும், விளையாட்டு மைதானத்தை கொண்டு வருவேன் என்று சொல்லி முதல்வர் அவர்கள் துணை முதல்வர் செய்து கொண்டிருக்கிறார். அதைப் பாராட்ட வேண்டுமா? வேணாமா? 75 ஆடிட் டோரியம் ரெடி. 12 கிராமங்களில் 32 வகையான ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் கொடுத்து மாணவர்களை கிராமத்தில் இருந்து ஊக்குவிக்க கூடிய அந்த செயல் செய்யப்பட்டு கொண்டிருக்கிறது. இதை பாராட்ட வேண்டுமா? வேண் டாமா?

தேர்தல் அறிக்கையில் சொன்ன 365 திட்டங்களை செயல்படுத்தி இருக்கி றார்கள். விளையாட்டுத்துறையில் சாதிப்பவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை, விளையாட்டுத் துறையில் பங் கெடுப்பவர்களுக்கு அதிகமான வாய்ப்பு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது படிப்பிற்கு தனி. விளையாட்டிற்கு தனி யாக முக்கியத்துவம் கொடுக்கப்படுகி றது.

ஒரு பக்கத்தில் பள்ளிகளில் மாணவர் களுக்கு காலை உணவுத் திட்டம். உயர் கல்வி கொண்டு செல்வதற்கு புதுமைப் பெண் திட்டம். தமிழ் புதல்வன் திட் டம். அவர்கள் படித்து முடித்து வெளியே வந்த பிறகு அவர்களுடைய திறமைகளை வளர்த்து உயர்தர வேலை வாய்ப்புக்கு தகுதிப்படுத்துவதற்கு நாள் முதல்வன் திட்டம். விளையாட்டுத்துறைக்கான திட்டங்கள். இது மட்டுமல்ல. மக்கள் நல்வாழ்வு துறையில் உலகத்திலேயே செய்யாத திட்டம் மக்களை தேடி மருத் துவம் திட்டம். இவற்றையெல்லாம் கொண்டு போய் சேர்த்து இருக்கிறார் கள். கிராமத்தில் மருத்துவர் எல்லாம் பார்த்தால் எங்களை தான் வீடு தேடி மருந்து கொடுத்து விடுகிறார்களே என்று கிராமத்தில் போய் கேட்டா சொல்வார்கள். 108 ஆம்புலன்ஸ் திட் டம். அது இருக்கும் போது அப்துல் கலாம் அவர்கள் அதற்கு தலைவராக இருந்தார். இந்தத் திட்டத்தை 12 மாநி லங்களில் கொண்டு போய் சேர்த்தோம்.

இந்த திட்டத்தை தமிழ்நாட்டிற்கு கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்று கலைஞர் அவர்களிடம் அப்துல் கலாம் தொலைபேசியில் தெரிவித்த பொழுது அதை உடனே செயல்படுத்து கிறேன் என்று கலைஞர் அவர்கள் சொன்னார். தமிழ்நாட்டில் இத்தனை திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டு பொருளாதார வளர்ச்சியில் இரட்டை இலக்கை அடைந்திருக்கிறது.

ஜெயலலிதா ஆறு ஆண்டுகள், எடப் பாடி பழனிச்சாமி அவர்கள் நான்காண் டுகள் முதல்வராக இருந்து ஈர்த்த முதலீ டுகளை விட கடந்த நான்கரை ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் 11 லட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்துள் ளார். அந்நிய முதலீடுகளாக கொண்டு வந்து சரித்திர சாதனைப் படைத்தவர். ஒரு ட்ரில்லியன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 2030ல் ஒரு டிர்ல்லி யன் இலக்கை அடைவோம் என்று மு க ஸ்டாலின் சும்மா சொல்லவில்லை. அதை கண்டிப்பாக அடைய வேண்டும் என்றால் அதை ஸ்டாலின் அவர்களால் மட்டும்தான் முடியும். அடுத்து வரக்கூ டிய 6 ஆண்டுகளில் ஆட்சியில் இருந் தால் 15% பொருளாதார வளர்ச்சியை கண்டிப்பாக மு.க. ஸ்டாலின் அவர்கள் அடைவார்கள்.

தமிழகம் மேலும் ஏற்றம் பெற முதல்வரின் ஆளுமை வேண்டும்!

முதல்வர் மீது வைக்கக் கூடிய குறை என்ன பழைய ஓய்வூதியம் தருவார் என்று சொன்னார் தரவில்லை. துப்புரவு பணியாளர்களை நிரந்தரமாக்கவில்லை. இவை எல்லாமே பணம் சார்ந்த குற்றச் சாட்டு. இந்தியாவை தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் நடை போட வைத்தால் இரட்டை இலக்கு பொரு ளாதர வளர்ச்சியை எட்டினால், ஒரு ட்ரில்லியன் இலக்கை அடைந்தால் பழைய ஓய்வூதிய திட்டத்தை குறைக் கக்கூடிய ஒரே முதல்வராக மு. க. ஸ்டாலின் இருப்பார். காவல்துறையில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று சொல்கிறார்கள். காவல்துறைக்கு ஏற்க னவே பணிச்சுமை அதிகம். காவல்து றைக்கு இருக்கக்கூடிய பணியாளர்க ளின் எண்ணிக்கை என்றைக்கு பத்தாது. விசாரணை கமிஷன் குழு தனியாக அமைக்கப்பட வேண்டும். பணம் வேண்டும். இந்த பணம் எப்படி வரும். Non Tax வரி இதுவரைக்கும் பத்தாயிரம் கோடியை தாண்டியது கிடையாது. கடந்த நான்கரை ஆண்டுகளில் 25 ஆயி ரம் கோடியை தமிழகம் எட்டி இருக்கி றது என்று சொன்னால், காரணம் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுடைய ஆளுமை. இதைப் பாராட்ட வேண் டுமா? வேண்டாமா? ஏற்றுக்கொள்ள வேண்டுமா? வேண்டாமா? இந்த ஆட்சி வரவேண்டும் என்று எதற்காக சொல்கிறோம் என்றால் இந்த ஐந் தாண்டு காலத்தில், ஒரு சாதனை படைத்து விட முடியாது குறைந்தது 10 ஆண்டுகள் வேண்டும். சில மாநிலங்க ளில் 10 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்தும் இந்தியா பின்னால் போய்க் கொண்டிருக்கிறது.

இந்த ஐந்து ஆண்டுகளிலே இவ்வ ளவு சாதனை படைத்த பிறகு இன் னொரு ஐந்தாண்டுகள் வாய்ப்பு அவ ருக்கு கிடைத்தால் நிறைவேற்றப்படாத திட்டங்கள், பொருளாதாரம் சார்ந்த திட்டங்கள், நிதி சார்ந்த திட்டங்கள், அனைத்தையும் செய்யக்கூடிய வாய்ப்பு பெற்றவராக திரு மு.க.ஸ்டாலின் அவர் கள் மட்டும்தான் செய்ய முடியும். இதில் எந்த தடையும் வந்து விடக்கூ டாது என்பது தான் இன்றைக்கு பிரச் சனை. கல்வி மருத்துவம் குடிநீர் வேலை வாய்ப்பு இதெல்லாம் தரமாக செய் வோம் என்று சொல்கிறோம். இதற்கு மேல் இதில் என்ன சொல்வது என்று தெரியவில்லை.

இரவும் பகலும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் அமைச்சர்கள். ஒரு பிரச்சனை என்றால் அங்கு சென்று நிற்கிறார்கள். 41 பேர் இறந்த பிறகு துரித நடவடிக்கை எடுக்கவில்லை என் றால், அது 100 பேரை தாண்டி இருக் கும். முதல்வர் எதுவுமே செய்யாமல் இருந்திருந்தால் நான்கு நாட்கள் ஆயி ருக்கும்.

முதல்வர் அவர்கள் அதை அரசியல் ஆக்கவில்லை. எந்த அரசியல் கட்சித் தலைவரும் தொண்டர்கள் இறக்க வேண்டும் என்று நினைக்க மாட்டார் கள். இது எனது கடமை இரவு ஒரு மணிக்கு கிளம்பிச் சென்று மூன்று மணி வரை அங்கு இருந்து பார்க்க வேண்டும் என்ற அவசியம் எங்கிருந்து வந்தது. ஒரு பெரும் கலவரம் ஏற்படுவதை தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள்.இவர்கள் தலை வர்களா? பின்னால் பிடரியில் அடிக்க ஓடியவன் தலைவனா? இதுதான் வித்தி யாசம்.

சினிமாவில் வசனம் பேசுபவர்கள் எல்லாம் தலைவராக முடியாது. சினிமா வில் வசனம் பேசிவிட்டு நேரிலே பார்த் தால் ஓடக்கூடிய கோழைகளாக லிட் டில் பூச்சிகள் என மயங்கி இளைஞர்கள் கூட்டம் அவர்களை அடிமையாக மாற் றாதீர்கள் என்பதற்குத்தான் இந்த கருத் தரங்கம். இளைஞர்களை அடிமைக ளாக மாற்றி ஒரு மனோபாவத்தை உருவாக்கி உயிரியல் கழிவுகளாக மாறி இன்றைக்கு இறந்தவர்களின் உயிர்க ளுக்கு என்ன மதிப்பு. முதல்வர் அவர் கள் கொடுத்த 10 லட்சம் தான் போய் சேர்ந்து இருக்கிறது. 20 லட்சம் இன் னும் போய் சேரவே இல்லை.

கும்பகோணத்தில் தீ விபத்து நடந் தது. குழந்தைகள் இறந்தார்கள். தீ வைத் தது யாரு தலைமையாசிரியரா? சென் னையில் ஒரு பேருந்தில் அடிபட்டு ஒரு குழந்தை இறந்தது. ஓட்டுனரையா பிடித்து உள்ளே வைத்தார்கள். தலை மையாசிரியர் பிடித்து வைத்தார்கள். சினிமா படப்பிடிப்பு நடத்தி 41 பேர் செத்து இருக்கிறார்கள். இப்போது யாரைப் பிடித்து உள்ளே வைக்க வேண் டும். பெருந்தன்மையோடு அவர் விட் டார். முதல்வர் சட்டத்தின் பால் செயல் பட்டு அரசியலை ஒதுக்கி அவர்களை அரசியலில் உச்சத்திற்கு விரட்டி கடை சியில் எங்கு போய் மாட்டி விடவேண் டுமோ அங்கு கரெக்டாக சேர்த்து விட் டார். அரசியலில் சோலி முடிந்தது. இப்போது பிரச்சனை என்னவென்றால் ஒரு ஆட்சி நடத்துவது என்பது சுலப மல்ல. ஒரு பக்கம் பிரச்சினைகளை சரி செய்ய வேண்டும். ஒரு பக்கம் இளை ஞர்களுக்கு மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்த வேண்டும். ஒரு பக்கம் சதி செயல்களை முறியடிக்க வேண்டும். இத்தனை செயல்களையும் செய்து தமிழ்நாட்டை முன்னேற்ற பாதையில் வளர்ச்சி பாதையில் நடத்த வேண்டும். இதை நடத்தினால் இந்த இளைஞர்க ளது முதுகு வலையாமல், நிமிர்ந்த நன் னடை போடக்கூடிய வாய்ப்பை உரு வாக்கக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறார் தமிழக முதல்வர் அவர்கள். கற்றறிந்த பெருமக்கள், சான்றோர்கள் இப்படிப்பட்ட நல்ல செயல்களை செய்யக்கூடிய ஒரு அர சிற்கு துணை நிற்க வேண்டுமா? வேண் டாமா? பொதுமக்கள் துணை நிற்க வேண்டுமா? வேண்டாமா? அதைத் தான் இந்திய ஜனநாயக மீட்பு இயக்கம் செய்கிறது. இந்த ஆட்சி தொடர வேண் டும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள். வெறும் முதல்வராக அல்ல. இந்தியாவில் இருக்கக்கூடிய முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக செயல்பட்டு கொண்டிருக்கிறார். அவ ருடைய செயல்பாடு தமிழகத்தின் தலை வராக மட்டுமல்ல. இந்தியாவின் தலை வராக அவர் உயர்ந்த நிற்கிறார்.

மாநில சுயாட்சிகளுக்கான போராட் டமாக இருந்தாலும் சரி. பாராளுமன் றத்தில் உரிமை குரல் எழுப்புவதாக இருந்தாலும் சரி. வார்டு மறு வரையறை செய்வதாக இருந்தாலும் சரி. மாநில அர சுகளை கருத்து கேட்காமல் ஒன்றிய அரசே செய்வதாக இருந்தாலும் சரி. அதை எதிர்த்து உரிமைகுரல் கொடுக்கக் கூடிய ஒரே தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் இருக்கிறார் என்றால் அவரை ஆதரிக்க வேண்டுமா? வேண் டாமா? இவரை விட்டு விட்டு தன்னை யும் அடிமையாக்கி கட்சியையும் அடி மையாக்கி தான் செய்த ஊழலுக்கு கட்சியை அடகு வைத்த வரை ஆதரிக்க வேண்டுமா? சினிமாவில் வரும் நடிப்பை வைத்துக்கொண்டு அரசியலில் நடிக்கக்கூடிய நடிகனை ஆதரிக்க வேண் டுமா? மக்கள் ஆதரிக்க வேண்டுமா? இளைஞர்களை போதைக்கு அடிமை யாக்கி, வன்முறைக்கு அடிமையாக்கி, ரவுடிசத்துக்கு அடிமையாக்கி, தனது படங்களில் மூலமாக இளைஞர்களை அடிமையாக்கிய ஒரு நடிகன் பின்னால் செல்லக்கூடிய விட்டில் பூச்சிகளாக மறைந்து போகக்கூடாது இளைஞர் களே உங்கள் கனவுகளை நினைவாக்கி உங்கள் லட்சியங்களை வென்றெடுத்து உங்களுக்கான பாதையை வகுத்துக் கொடுக்கக்கூடிய ஒரு தலைவன் இருக் கிறார் என்று சொன்னால் அந்தத் தலை வனை நீங்கள் விட்டு விட்டீர்கள் என்று சொன்னால் உங்கள் வாழ்க்கை வளம டையாது. உங்கள் சமுதாயம் தலைகுனி யும். தோற்கடிக்கப்படும். தலைமு றையே வருத்தப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதை இளைஞர் கள் மனதில் கொள்ள வேண்டும். எதிர் காலம் என்பது இளைஞர்களின் கையில் இருக்கிறது. அந்த இளைஞர்களை பக் குவப்படுத்தி அந்த இளைஞர்களை கேள்வி குறி போல அவர்கள் முதுகை வளைக்காமல் நி